## சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகம்,
## கிழக்குப் பல்கலைக் கழகம்,
## இலங்கை



# வருடாந்த அறிக்கை - 2013

## தூரநோக்கு

**சுவாமி விபுலானந்த அழகியல் கற்கைகள் நிறுவகம், கிழக்குப் பல்கலைக் கழகம், இலங்கை தூர நோக்கானது**

கேள்விசார் நோக்கு

தொடர்பில் அழகியல் துறை

புலங்களில் முதன்மை

பெற்ற நிறுவகமாக

விளங்குதல் ஆகும்

## பணிக்கூற்று

**சுவாமி விபுலானந்த அழகியல் கற்கைகள் நிறுவகம், கிழக்குப் பல்கலைக் கழகம், இலங்கை பணிக்கூற்றானது**

தாம் தெரிவு செய்யும் அழகியல் புலம் சார் துறைகளில் அறிவையும் அளிக்கை திறன்களையும் பெற்றுக் கொள்ள சந்தர்ப்பத்தினை வழங்குவதன் மூலம் வேலை வாய்ப்பினை பெற்றுக் கொள்ளத்தக்க பட்டதாரிகளையும், டிப்ளோமா தாரிகளையும், உருவாக்கும் அதேவேளை இலங்கையின் கலாசார பாரம்பரியத்தினை பேணுதலும் வளப்படுத்தலும் சுவாமி விபுலானந்த அழகியல் கற்கைகள் நிறுவகத்தின் பணிகளாக அமைகின்றன

# குறிக்கோள்கள்

## சுவாமி விபுலானந்த அழகியல் கற்கைகள் நிறுவகம், கிழக்குப் பல்கலைக் கழகம், இலங்கை

### குறிக்கோள் :

1. கற்பித்தல், ஆராய்ச்சி மற்றும் அறிவுப் பகிர்வு என்பவற்றில் அதி சிறந்த தன்மையினைப் பேணுதல்

2. மனிதவளங்கள், அடிப்படைக் கட்டுமானங்கள், மற்றும் ஏனைய வள அபிவிருத்தி என்பவற்றினூடாக நிறுவன ரீதியான இயலுமையை உயர்த்துதல்

3. இனங்களின் சமூக பொருளாதார மற்றும் கலாச்சார தேவைகளுக்கான சேவையினை வழங்குதல்

4. நல்லாட்சியினை நடைமுறைப்படுத்தலும் மேம்படுத்தலும்

# முகாமைத்துவ சபை உறுப்பினர்கள்

**அவைத் தலைவர்:**

கலாநிதி. கி .கோபிந்தராஜா உபவேந்தர், கி.ப.கழகம், இலங்கை

**பணிப்பாளர்:**

கலாநிதி. க. பிரேமகுமார் சு.வி.அ.க.நிறுவகம்

**துறைத் தலைவர்:**

கலாநிதி. க. இராஜேந்திரம் - கலை கலாச்சார பீடம், கி.ப.கழகம், இலங்கை

**ப.மா.ஆணைக்குழு உறுப்பினர்:**

பேராசிரியர். எஸ். மௌனகுரு

வண.பிதா. ஜோசெப்மேரி

வண. ஸ்ரீமத். சுவாமி சர்வரூபானந்தஜீ மகராஜ்

**பேரவை உறுப்பினர்:**

திருமதி. பி. எஸ். எம். சார்ள்ஸ்

திரு. எம்.எம்.ம.ஃறூப் கரீம்

**மூதவை உறுப்பினர்:**

திரு. ப. சச்சிதானந்தம்

திருமதி. எம். நதிரா

**கல்விசார் அவை உறுப்பினர்:**

கலாநிதி எஸ். ஜயசங்கர்

செல்வி. எஸ்.சுப்பிரமணியம்

**உயர்கல்விஅமைச்சு பிரதிநிதி:**

திரு. வி. சிவநாதன்

**நிதித்துறை பிரதிநிதி:**

திரு. ஆர். நெடுஞ்செழியன்

**சிரேஷ்ட உதவிப் பதிவாளர் (செயலாளர்):**

திரு. எ. ஜெ. கிருஷ்டி

# வருடாந்த அறிக்கை

## 03. பணிப்பாளரின் மீளாய்வு:

### 3.1 சுருக்க அறிமுகம்:

சுவாமி விபுலானந்த இசை, நடனக் கல்லூரியானது பிராந்திய அலுவல்கள் மற்றும் இந்து கலாச்சார அமைச்சினால், இராமகிருஷ்ண பரம்பரையில் உதித்த கிழக்கு மாகாணத்தின் பெரும் அறிஞராக விளங்கியவரும் விஞ்ஞானம், தமிழ் மற்றும் அழகியற் கலைகளிலும் பாண்டித்தியம் பெற்ற சுவாமி விபுலானந்த அடிகளின் ஞாபகமாக 29.05.1982ஆம் ஆண்டு மட்டக்களப்பு கல்லடியில் அமைந்துள்ள இராமகிருஷ்ணமிசன் மணிமண்டபத்தில் நிறுவப்பட்டது. சுவாமி விபுலானந்தர் அடிகள் இலங்கைப் பல்கலைக்கழகத்தின் முதல் தமிழ்ப் பேராசிரியர் ஆவார். ஆரம்பகட்டத்தில் இக்கல்லூரியில் நான்கு வருடத்திலான டிப்போமா கற்கைகள் இசை மற்றும் நடனத் துறையில் நடாத்தப்பட்டது. 1982ம் ஆண்டு மார்ச் மாதத்தில் முன்னாள் இந்து கலாச்சார அமைச்சர் கௌரவ செல்லையா இராசதுரை அவர்களினால் அடிக்கல் நாட்டப்பட்டது. 1986ம் ஆண்டு தொடக்கம் விரிவுரைகளும் பயிற்சி வகுப்புக்களும் மட்டக்களப்பு, நொச்சிமுனையில் அமைந்துள்ள சுவாமி விபுலானந்த இசை நடனக் கல்லூரியின் புதிய கட்டடத் தொகுதியில் தொழிற்பட ஆரம்பித்தது. (தற்போதைய சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகக் கட்டடத் தொகுதி)

கிழக்குப் பல்கலைக்கழகம் நிறுவப்பட்டதிலிருந்து சுவாமி விபுலானந்த இசை நடனக் கல்லூரியை இணைத்துக் கொள்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அத்துடன்கல்லூரியின் மாணவர்களினால் தொடர்ச்சியான மறியல் போராட்டங்களும் மேற்கொள்ளப்பட்டது. இதன் விளைவாகவும் பாராளுமன்ற உறுப்பினர்களினதும் பல்வேறு பொது நிறுவனங்களினதும் அழுத்தங்கள் காரணமாகவும் இக்கல்லூரியினை கிழக்குப் பல்கலைக்கழகத்துடன் இணைப்பதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் உயர்கல்வி அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டது.

சுவாமி விபுலானந்த இசை நடனக் கல்லூரியானது 20.04.2001ம் ஆண்டு அன்றைய உயர்கல்வி மற்றும் தகவல் தொழிநுட்ப அபிவிருத்தி அமைச்சுக்கு சம்பிரதாய ரீதியாக கலாச்சார அலுவல்கள் அமைச்சினால் கையளிக்கப்பட்டது. இதன்போது கல்லூரியின் சிறப்பு அடையாளத்தைப் பேணும்பொருட்டு சுவாமி விபுலானந்த அடிகளின் திருநாமம் தொடர்ந்து பயன்படுத்தப்பட வேண்டும் என்ற வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

சுவாமி விபுலானந்த இசை நடனக்கல்லூரியானது 01.01.2002 அன்று பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் வழிகாட்டலில் கிழக்குப் பல்கலைக் கழகத்துடன் இணைக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து இசை, நடன மானிக் கற்கை நெறிகளுக்கான மாணவர்கள் அனுமதிக்கப்பட்டு கிழக்குப் பல்கலைக் கழகத்தினால் பட்டங்கள் வழங்கப்பட்டன.

அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களில் இசை மற்றும் நடனத்தில் டிப்ளோமா பெற்றுக் கொண்ட மாணவர்களுக்கு சுவாமி விபுலானந்த இசை நடனக் கல்லூரியில் பட்டப்படிப்பை மேற்கொள்ளுவதற்கான இரண்டு வருட விலக்களிப்புச் சலுகை மூதவையின் அங்கீகாரத்துடன் வழங்கப்பட்டது. அதேவேளை இணைத்துக் கொள்ளப்பட்ட ஆசிரியர்கள் மற்றும் கல்விசாரா ஊழியர்களுக்கான சம்பளம் கிழக்குப் பல்கலைக்கழகத்தினால் வழங்கப்பட்டது. 2001ம் ஆண்டிலிருந்து 2005ம் ஆண்டு வரைக்கும் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கலை கலாச்சார பீடத்தினால் நிறுவகம் மேற்பார்வை செய்யப்பட்டது. கீழ்வரும் நபர்கள் நிறுவகத்தினை பல்கலைக்கழகத்தின் நிலைக்குத் தரமுயர்த்துவதன் பொருட்டு கிழக்குப் பல்கலைக்கழகத்தின் பேரவையினால் நியமிக்கப்பட்டனர். இக்காலகட்டத்தில் கல்வி, நிர்வாகம் தொடர்பான அடித்தளம் போடப்பட்டது.

- பேராசிரியர். அம்மன்கிளி முருகதாஸ்
  பீடாதிபதி, கலைகலாச்சார பீடம் (2001 - 2002)

- பேராசிரியர். சி.மௌனகுரு
  தலைவர், நுண்கலைத்துறை (2002 - 2004)

- திரு.பா.சுகுமார்
  தலைவர், நுண்கலைத்துறை (2004 - 2005)

அழகியல் கற்கைத்துறையில் உயர்கல்வியை முன்னேற்றி விருத்தி செய்யும் நோக்குடன் சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகம் 1978ம் ஆண்டின் 16ம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் 24B என்னும் பிரிவின் கீழ் 2005.06.03ஆந் திகதிய 1395/22 இலக்க விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளையால் 2005.03.14ஆந் திகதி நிறுவப்பட்டது.

முதலாவது தொகுதி மாணவர்கள் 2005/2006 கல்வியாண்டில் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அனுமதிக்கப்பட்டார்கள். சுவாமி விபுலானந்த இசை நடனக் கல்லூரியின் எல்லா ஆசிரியர்களும் கல்விசாரா உத்தியோகத்தர்களும் 2005ம் ஆண்டு மார்ச் மாதத்திலிருந்து கிழக்குப் பல்கலைக்கழகத்துடன் இணைக்கபட்டார்கள். குறிப்பிட்ட ஆசிரியர் சிரேஷ்ட விரிவுரையாளராகவும், ஏனைய ஆசிரியர்கள் தகுதிகாண் விரிவுரையாளர்களாகவும் இணைத்துக் கொள்ளப்பட்ட அதேவேளை ஏனையவர்கள் போதனாசிரியர்களாகவும் உள்வாங்கப்பட்டார்கள். ஆத்துடன் பின்வரும் மூன்று கற்கைத் துறைகளும் அங்கீகரிக்கப்பட்டது.

- கர்நாடக சங்கீதத்துறை
- நடன நாடகத்துறை
- கட்புல தொழிநுட்பத்துறை

நிறுவனத்தின் முதலாவது பணிப்பாளராக திருமதி.பாலாம்பிகை இராஜேஸ்வரன், MA.(Music), M.Phil (India) பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் 2005/03/14ந் திகதியிலிருந்து அமுலாக்கும் வரையில் தொடர்ச்சியாக இரு தடவைகள் நியமிக்கப்பட்டார். அவர் 23.04.2012ம் திகதியில் ஓய்வுபெற்றார். கலாநிதி க. பிரேமகுமார், சிரேஷ்ட விரிவுரையார், விவசாயபீடம், கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை என்பவர் 19.04.2012ம் திகதி தொடக்கம் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

### 3.2 அமைவிடம்

மட்டக்களப்பு நகரிலிருந்து 3 கி.மீ. தூரத்தில் மட்டக்களப்பு கல்முனை பிரதான வீதி, நெச்சிமுனையில் இந் நிறுவகம் அமைந்துள்ளது.

2005/2006 கல்வியாண்டில் நிறுவனத்திற்கு முதலாவது தொகுதி மாணவர்கள் இசை மற்றும் நடன கற்கைகள் நெறிக்காக அனுமதிக்கப்படடார்கள். கல்வியாண்டு 2006/2007ல் இருந்து பின்வரும் நான்கு கற்கை நெறிகளுக்கும் மாணவர்கள் அனுமதிக்கப்பட்டார்கள்.

- இசை (கர்நாடக சங்கீதம்)
- நடனம் (பரதநாட்டியம்)
- நாடகமும் அரங்கியலும்
- கட்புலக் கலை

2013ம் ஆண்டின் மொத்த மாணவர் தொகை 997 ஆகும். கல்வியாண்டு 2012/2013இல் 423 மாணவர்கள் அனுமதிக்கப்பட்டார்கள். துறை ரீதியான மாணவர் எண்ணிக்கை கீழே தரப்படுகின்றது.

- இசை (கர்நாடக சங்கீதம்) - 80
- நடனம் (பரதநாட்டியம்) - 50
- நாடகமும் அரங்கியலும் - 50
- கட்புலக் கலை - 50

### 3.3 சாதனைகள்

#### 3.3.1. சிறப்பு திறமை விருது

உயர்கல்வி அமைச்சின் திறன் காண் விருது வழங்கும் விழா – 2013 இல் கிழக்குப் பல்கலைக்கழகம், தமிழ்மொழிப் பிரிவில் பல விருதுகளை பெற்றுள்ளது. இவற்றில் முதலாவது இடத்திற்கான 04 விருதுகளை யும் 3 முதலாம் இட தேசிய விருதுகளை கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் வவுனியாவில் நடாத்தப்பட்ட அரச நடன திருவிழா-மாசி மாதம் 2013 இல் பெற்றுக்கொண்டது.

#### 3.3.2. கலாச்சார பன்முகத்தன்மையூடாக சமூக ஒற்றுமை

கலாச்சார பன்முகத்தன்மையூடாக சமூக ஒற்றுமையை மேம்படுத்துவதற்காக சு.வி.அ.க. நிறுவகம் இலங்கையின் பல பாகங்களில் பல்வேறுபட்ட நடன மற்றும் கலாச்சார நிகழ்சிகளில் எமது மாணவர்கள் பங்கு கொண்டார்கள்.

### 3.3.3. கலாச்சார விழுமியங்களை பாதுகாத்தலும் முன்னேற்றுதலும்

சு.வி.அ.க. நிறுவகம் கடந்த 25 ஆண்டகளாக, பிரதேச மற்றும் தேசிய கலாச்சார விழுமியங்களை பாதுகாத்து முன்னேற்றுவதில் பிரதான பங்கினை வகித்தது. இந்த நோக்கத்தினை அடைவதற்காக நிறுவகம் பல்வேறுபட்ட நாட்டார் மற்றும் பாரம்பரிய கலை கலாசார நிகழ்வுகளை ஒழுங்கு செய்துள்ளது.

### 3.3.4. கலாச்சார நிகழ்வுகளினூடாக சமூகங்களுக்கிடையில் இணக்கப்பாட்டினை முன்னேற்றுதல்

எப்போதாவது உயர்மட்ட அரச அதிகாரிகள், அமைச்சர்கள் எமது பிரதேசத்திற்கு இணக்கப்பாட்டினை முன்னேற்றும் நோக்கில் வருகைதரும் போது எமது மாணவர்கள் எப்போதும் வரவேற்பு நடனம் மற்றும் கலாச்சார நிகழ்வுகளை ஒழுங்குபடுத்தி பங்குபற்றியுள்ளார்கள்.

### 3.3.5. மகிந்த சிந்தனை நோக்கிய பங்களிப்பு

இலங்கையெங்கும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள தேசத்திற்கு மகுடம் கண்காட்சி மற்றும் கலாபொல கண்காட்சி என்பவற்றில் எமது மாணவர்கள் பங்குபற்றி மகிந்த சிந்தனையில் முன்மொழியப்பட்ட நோக்கத்தினை அடைந்து கொள்ளும் வகையில் செயற்பட்டுள்ளார்கள்.

### 3.3.6. சமூக ஒற்றுமையினை முன்னேற்றும் பொருட்டு இணைந்த கலாச்சார நிகழ்வுகளை ஒழுங்குபடுத்துதல்

சமூக ஒற்றுமையினை முன்னேற்றும் நோக்குடன் எமது மாணவர்கள் இணைந்த நாடகப் பயிற்சியினை மக்கள் களரியுடனும் மற்றும் இணைந்த கலாச்சார நிகழ்வுகளை கட்புல மற்றும் ஆற்றுகைகள் பல்கலைக்கழகத்துடன் (UVAPA) இணைந்தும் செயற்படுகின்றார்கள்.

### 3.3.7. சமய சடங்குகளின் போது கலாச்சார நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்தல்

நிறுவகத்திற்கு உள்ளேயும் வெளியேயும் மும்மதங்களின் சமய சடங்குகளின் போது கலாச்சார நிகழ்சிகளை எமது மாணவர்கள் ஒழுங்கு செய்துள்ளார்கள்.

### 3.3.10. தொழிற்பட்டறைகளை நடாத்துதல்

துறைசார் நிபுணர்களைக் கொண்டு எல்லாத் துறைகளிலும் தொழிற்பட்டறை மற்றும் கருத்தரங்குகளை மாணவர்களுக்காக நடாத்தியிருந்தமை.

### 3.4. பின்னடைவுகளும் அதற்கான நியாயப்படுத்தல்களும்

நிறுவகத்திற்கு சொந்தமாக ஆறு ஏக்கர் நிலத்துண்டு உள்ளது. அவை நிறுவனத்தின் விரிவாக்கங்களுக்கும் அபிவிருத்திக்கும் போதுமானதாக இல்லை.

இருநூறு மாணவர்களை உள்ளடக்குவதற்கான பெண்களுக்கான விடுதிவசதியை வழங்கும் திட்ட முன்மொழிவு வழங்கப்பட்டும் அமைச்சரவையின் அங்கீகாரத்திற்காக காத்துக்கிடக்கின்றது. நிறுவனத்தின் அடிக்கட்டுமான வசதிகள் குறைவாகவே உள்ளது. புதிய கட்டுமான திட்டங்களுக்கான திட்ட முன்மொழிவு நிறுவனத்தின் பிரதான திட்டவரைபடம் (Master plan) தயாரிக்கப்பட்டபின்பு சமர்ப்பிக்கப்படவுள்ளது.

### 3.5. எதிர்காலத் திட்டம்

தற்போதுள்ள கல்விசார் துறையினால் பின்வரும் பீடங்களாக தரமுயர்த்துவதற்காக திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளன.

ஆ) இசைப் பீடம்
ஆ) நடனப் பீடம்
இ) நாடகமும் அரங்கியலும் பீடம்
இ) கட்புல, தொழிநுட்ப பீடம்

தொழிநுட்பக் கலையில் சிறப்புப்பட்டப் படிப்பினை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் கட்புலத் தொழிநுட்பத் துறையிலும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. தற்போதுள்ள நான்கு கற்கைகளுக்குமான பாடத்திட்டத்தினை மீளாய்வு செய்யும் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

**04. வளங்கள் மற்றும் மாணவர்கள் பற்றிய விபரங்கள் 31.12.2013 இல் உள்ளபடி**

| துறை | கற்கைநெறி | மொத்த மாணவர் தொகை | கல்விசார் ஊழியர் மொத்த தொகை | கல்விசாரா ஊழியர் மொத்த தொகை |
|---|---|---|---|---|
| சங்கீதம் | நுண்கலைப்பட்டதாரி (சங்கீதம்) | 305 | 14* | 02 |
| நடன மற்றும் நாடக மற்றும் அரங்கக் கலைகள் | நுண்கலைப்பட்டதாரி (நடனம்) | 197 | 07* | 01 |
| | நுண்கலைப்பட்டதாரி (நாடகமும் அரங்கமும்) | 249 | 08* | |
| கட்புல கலைகள் | நுண்கலைப்பட்டதாரி (கட்புலக்கலை) | 246 | 08* | |
| நூலகம் | | - | 01 | 02 |
| நிர்வாகம் | | - | - | 11 |
| நிதி | | - | - | 05 |
| **மொத்தம்** | | **997** | **38** | **21** |

**குறிப்பு** : மாணவர் ஊழியர் வீதம் நடன, நாடக மற்றும் அரங்கியல் கலை மற்றும் கட்புல தொழிநுட்ப கலைகளில் மிகவும் குறைவாக இருப்பதால் அதிக ஆளணி உருவாக்கப்பட வேண்டும்.

## 05. உள்வாரி மாணவர் விபரம் 31.12.2013 இல் உள்ளபடி

| துறை | கற்கைநெறி | மொழிமூலம் | 2013ம் வருடத்தின் மாணவர் தொகை | 2013ம் ஆண்டு1ம் வருட 1ஆம் அரையாண்டு மாணவர் தொகை | 2013ம் ஆண்டு 1ம் வருட 2ம் அரையாண்டு மாணவர் தொகை | 2ம் வருட மாணவர் தொகை | 3ம் வருட மாணவர் மொத்த | 4ம் வருட மாணவர் தொகை |
|---|---|---|---|---|---|---|---|---|
| சங்கீதம் | நுண்கலைப்பட்டதாரி (சங்கீதம்) | தமிழ் | 305 | 72 | 77 | 79 | 46 | 31 |
| நடன மற்றும் நாடக மற்றும் அரங்கக் கலைகள் | நுண்கலைப்பட்டதாரி (நடனம்) | | 197 | 39 | 43 | 51 | 34 | 30 |
| | நுண்கலைப்பட்டதாரி (நாடகமும் அரங்கமும்) | | 249 | 43 | 50 | 54 | 48 | 54 |
| கட்புல கலைகள் | நுண்கலைப்பட்டதாரி (கட்புலக்கலை) | | 246 | 47 | 52 | 50 | 50 | 47 |
| **மொத்தம்** | | | **997** | **201** | **222** | **234** | **178** | **162** |

**குறிப்பு** : கல்வியாண்டு 2005/2006 இற்காக எடுக்கப்பட்ட முதலாவது மாணவர் குழாம் 2010ம் ஆண்டு பின்வரும் கற்கை நெறிகளில் பட்டம் பெற்றனர்- சங்கீதம் (27 மாணவர்கள்)மற்றும் நடனம் (18 மாணவர்கள்). கல்வியாண்டு 2006.'.2007 இற்காக எடுக்கப்பட்டஇரண்டாவது மாணவர் குழாம் 2012ஆம் ஆண்டு பின்வரும் கற்கை நெறிகளில் பட்டபம் பெற்றனர்.சங்கீதம் 44 பேர்இ நடனம், 20 பேர்நாடக மற்றும் அரங்கியல் 46 பேர் மற்றும் கற்புல தொழிநுட்பகலை 6 பேர் . 2007/2008 கல்வியாண்டிற்காக எடுக்கப்பட்ட 3 வது மாணவர் குழாம் 2013இல் பட்டம் பெற்றனர்.

## 06. 31.12.2013இல் பட்டம் பெற்று வெளியேறிய மாணவர்கள் விபரம்

| துறை | கற்கைநெறி | மொழி மூலம் | 2011 | 2012 | 2013 |
|---|---|---|---|---|---|
| சங்கீதம் | நுண்கலைப்பட்டதாரி (சங்கீதம்) | தமிழ் | 44 | 45 | 19 |
| நடன மற்றும் நாடக மற்றும் அரங்கக் கலைகள் | நுண்கலைப்பட்டதாரி (நடனம்) | | 20 | 20 | 22 |
| | நுண்கலைப்பட்டதாரி (நாடகமும் அரங்கமும்) | | 46 | 44 | 46 |
| கட்புல கலைகள் | நுண்கலைப்பட்டதாரி (கட்புலக்கலை) | | 06 | 06 | 33 |
| **மொத்தம்** | | | **116** | **115** | **120** |

**குறிப்பு**: வருடாவருடம் உள்வாங்கப்பட்ட மாணவர் எண்ணிக்கை அதிகரித்ததற்கு ஏற்ப பட்டதாரி மாணவர்களது எண்ணிக்கையும் அதிகரித்தது.

| 07. கல்விசார் ஊழியர் விபரம் 31.12.2013 இல் உள்ளபடி | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| துறை | கற்கைநெறி | மொழிமூலம் | சிரேஷ்ட பேராசிரியர் | பேராசிரியர் | சிரேஷ்ட விரிவுரையாளர் | விரிவுரையாளர் | விரிவுரையாளர் (தகுதிகாண்) | உதவி விரிவுரையாளர் | போதனாசிரியர் |
| சங்கீதம் | நுண்கலைப்பட்டதாரி (சங்கீதம்) | தமிழ் | - | - | - | - | 12 | 01 | 01 |
| நடன மற்றும் நாடக மற்றும் அரங்கக் கலைகள | நுண்கலைப்பட்டதாரி (நடனம்) | | - | - | - | - | 04 | 03 | - |
| | நுண்கலைப்பட்டதாரி (நாடகமும் அரங்கமும்) | | - | - | 01 | 01 | 04 | 04 | - |
| கட்புல கலைகள | நுண்கலைப்பட்டதாரி (கட்புலக்கலை) | | - | - | - | - | 02 | 06 | - |
| நூலகம் | | | - | - | - | - | - | - | - |
| கணணி பிரிவு | | | - | - | - | - | - | - | 01 |
| **மொத்தம்** | | | - | - | **01** | **01** | **23** | **14** | **02** |

**<u>குறிப்பு</u>** : 32 கல்விசார் ஊழியர்களில் 24 பேர் விரிவுரையாளர்கள் (தகுதிகாண்) 6 பேர் விரிவுரையாளர்கள் கலாநிதி கற்கையை மேற்கொள்கிறார்கள

| 08. கல்விசாரா ஊழியர் விபரம் 31.12.2013 இல் உள்ளபடி | | | | |
|---|---|---|---|---|
| துறை | நிறைவேற்று அலுவலர் | தொழிநுட்ப அலுவலர் | எழுதுவினைஞர் மற்றும் இணைந்த அலுவலர் | சிற்றூழியர் |
| சங்கீதம் | - | - | 01 | 01 |
| நடன மற்றும் நாடக மற்றும் அரங்கக் கலைகள் | - | - | - | 01 |
| கட்புல மற்றும் தொழில்நுட்பக் கலைகள் | - | - | - | - |
| நூலகம் | | - | 01 | 01 |
| நிதி | 01** | - | 04* | 01 |
| நிர்வாகம் | 02 | - | 08 | 01 |
| **மொத்தம்** | **03** | **-** | **14** | **05** |

**<u>குறிப்பு</u>** : 2008ம் ஆண்டிற்கு பிறகு எல்லா வகைக்குமான கல்விசாரா ஆளனி உருவாக்கப்படவில்லை.

- பொருட்காப்பாளர் 2012 இல் இடைநிறுத்தம் செய்யப்பட்டார்
- சிரேஷ்ட உதவி பொருளாளர் 2012 இல் இடைநிறுத்தம் செய்யப்பட்டார்.

| 09. ஆய்வு, புத்தாக்கம் மற்றும் வெளியீடுகள் பற்றிய விபரம் 31.12.2013 இல் உள்ளபடி | | | |
|---|---|---|---|
| விடயம் | பிரசுரிக்கப்பட்டது | விற்பனைசெய்யப்பட்டது | அளிக்கை செய்யப்பட்டது |
| a. ஆய்வுகளின் எண்ணிக்கை | - | - | 01 |
| b. புத்தாக்கங்களின் எண்ணிக்கை | - | - | - |
| c. செய்தித் தாள்களின் எண்ணிக்கை | - | - | |
| d. நூல்களின் எண்ணிக்கை | - | - | - |
| e. கட்டுரைகளின் எண்ணிக்கை | 13 | - | 04 |
| f. ஏனையவை | 01 | - | 01 |
| **மொத்தம்** | **14** | **-** | **06** |

**குறிப்பு** : 32 கல்விசார் ஊழியர்களில் தகுதிகாண் விரிவுரையாளர்கள் தொகை 29 ஆக உள்ளது. அவர்கள் தங்களது ஆய்வுகளை முதுகலை/முனைவர் நிகழ்ச்சிகளில் மேற்கொண்டுள்ளனர்.

| 10. நிகழ்ச்சி திட்டங்கள், கருத்தரங்குகள் மற்றும் பயிற்சி பட்டறை விபரங்கள் 31.12.2013 இல் உள்ளபடி | | | |
|---|---|---|---|
| விடயம் | பின்பற்றியது | நிறைவுசெய்யப்பட்டது | அளிக்கை செய்யப்பட்டது |
| a. பட்டப்பின் படிப்பு நிகழ்ச்சி திட்டங்களின் எண்ணிக்கை | - | - | - |
| b. பட்டப்பின் டிப்ளோமா நிகழ்ச்சி திட்டங்களின் எண்ணிக்கை | - | - | - |
| c. பட்டப்பயில் நிகழ்ச்சி திட்டங்களின் எண்ணிக்கை | - | - | - |
| d. டிப்ளோமா நிகழ்ச்சி திட்டங்களின் எண்ணிக்கை | - | - | - |
| e. சான்றிதல் நிகழ்ச்சி திட்டங்களின் எண்ணிக்கை | **01** | **01** | **01** |
| f. ஏனையவை | - | - | - |
| **மொத்தம்** | **01** | **01** | **01** |

**குறிப்பு** : அந்தந்த திணைக்களங்களுக்குரிய மாணவர்கள் நாடகம், மற்றும் அரங்கியலும், கட்புல தொழிநுட்பதுறை கலைகளுக்குரிய பயிற்சிப்பட்டறைகளில் கலந்து கொண்டு ஆய்வுகளை முன்னிலைப்படுத்தியதுடன் பூர்த்தி செய்தார்கள்.

| 11. பெறப்பட்ட விருதுகள் பற்றிய விபரங்கள் 31.12.2013 இல் உள்ளபடி | | | |
|---|---|---|---|
| விடயம் | விருதுகளின் எண்ணிக்கை | கல்விசார் உத்தியோகத்தர் | மாணவர் எண்ணிக்கை |
| a. உள்ளூர் விருதுகள் | - | - | - |
| b. தேசீய விருதுகள் | 02 | 01 | 05 |
| c. சர்வதேச விருதுகள் | 03 | - | - |
| d. ஏனையவை | - | 01 | 10 |
| **மொத்தம்** | **05** | **02** | **15** |

| 12. மீண்டெழும் செலவீனங்கள் பற்றிய விபரங்கள் 31.12.2013 இல் உள்ளபடி | | |
|---|---|---|
| விடயம் | 2012Rs. | 2013Rs. |
| a. ஊழியர் ஊதியம் | 32,873,382.66 | 42,917,599.72 |
| b. போக்குவரத்து | 211,933.00 | 156,364.01 |
| c. நிரம்பல் | 3,354,262.57 | 2,801,251.09 |
| d. பராமரிப்பு | 1,045,978.52 | 1,252,750.87 |
| e. ஒப்பந்த சேவைகள் | 11,137,619.11 | 13,469,937.47 |
| f. ஏனையவை | 2,681,065.59 | 6,354,578.60 |
| **மொத்தம்** | **51,304,241.45** | **66,952,481.76** |

**குறிப்பு** : மாணவர் அனுமதி அதிகரிக்கப்பட்டதன் காரணமாக பாதுகாப்பு சேவை மற்றும் ஒப்பந்த சேவைகள் தொடர்பான செலவினங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

| 13. மூலதன செலவீனங்கள் பற்றிய விபரங்கள் 31.12.2013 இல் உள்ளபடி | | |
|---|---|---|
| விடயம் | 2012 Rs. | 2013 Rs. |
| a. தளபாடங்கள் மற்றும் ஏனைய உபகரணங்கள் கொள்வனவு | 7,992,878.74 | 34,363,228.19 |
| b. இயந்திரங்கள் கொள்வனவு | 75,376.48 | - |
| c. கட்டடங்கள் மற்றும் கட்டமைப்பு கொள்வனவு | 6,034,606.36 | 26,955,779.69 |
| d. ஏனையவை | - | - |
| **மொத்தம்** | **14,102,861.58** | **61,319,007.88** |

**குறிப்பு** : அதிகரிக்கப்பட்ட மாணவர் அனுமதியின் காரணமாக அம்மாணவர்களுக்கான இருப்பிட வசதி, தளபாடங்கள் மற்றும் ஏனைய உபகரணங்கள் கொள்வனவுக்கான செலவுகள், கட்டடங்கள் மற்றும் கட்டமைப்புக் கொள்வனவு தொடர்பான செலவினங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

| 14. செயற்டதிட்டங்கள் பற்றிய விபரங்கள் (உள்ளூர்/வெளிநாட்டு நிதியுதவி) 31.12.2013 இல் உள்ளபடி | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் மற்றும் விபரங்கள் | கடன்/ மானியம் | நிதி வழங்கிய நிறுவனம் | TCE Rs. | RFA Rs. | DF Rs. |
| HETC | மானியம் | உலக வங்கி | 15 M | - | - |
| - | - | - | - | - | - |
| - | - | - | - | - | - |
| **மொத்தம்** | **-** | **-** | **15 M** | **-** | **-** |

**குறிப்பு** : சமர்ப்பிக்கப்பட்ட செயற்திட்ட பிரேரணைக்காக உலகவங்கியின் உதவித் திட்டத்தினால் (HETC திட்டம்) கிடைக்கப்பட்ட 15 மில்லியன் தகவல் தொழில்நுட்பவியல், ஆங்கிலமொழி அபிவிருத்தி, நுண்திறன் மற்றும் சமூக ஒற்றுமை போன்றவற்றை விருத்தி செய்வதற்காக வழங்கப்பட்டுள்ளது.

| 15. செயற்திட்ட செலவீனங்கள் பற்றிய விபரங்கள் (உள்ளூர்/வெளிநாட்டு நிதியுதவி) 31.12.2013 இல் உள்ளபடி | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | TCE Rs. | 2012 இல் செலவீனங்கள் | 2013 இல் Rs. செலவீனங்கள் | 31.12.2013 இல் திரட்டிய செலவீனங்கள் | பௌதீக விருத்தி வீதம் |
| | **15 M** | **-** | **-** | **-** | **-** |
| **-** | **-** | **-** | **-** | **-** | **-** |
| **-** | **-** | **-** | **-** | **-** | **-** |
| **-** | **-** | **-** | **-** | **-** | **-** |
| **மொத்தம்** | **15 M** | **-** | **-** | **-** | **-** |

**குறிப்பு** : நிதியை பெற்றுக்கொள்வதில் ஏற்பட்ட தாமதத்தின் காரணமாக நிதி பயன்படுத்தப்படவில்லை.

| 16. நிதி விருத்தி பற்றிய விபரங்கள் (செலவீனங்கள்) 31.12.2013 இல் உள்ளபடி | | | |
|---|---|---|---|
| விடயம் | 2012 க்கான வழங்கல் Rs. | 2012 இல் செலவீனங்கள் Rs. | சேமிப்பு/ மிகை Rs. |
| a. செயற்திட்டம் தவிர்ந்த மீண்டெழும் செலவீனங்கள் | 69,635,789.90 | 72,022,453.79 | 2,386,663.89 |
| b. செயற்திட்டம் தவிர்ந்த மூலதன செலவீனங்களா | 50,477,000.00 | 61,319,007.88 | 10,842,007.88 |
| c. செயற்திட்டம் - உள்ளூர் நிதியுதவி | - | - | - |
| d. செயற்திட்டம் - வெளிநாட்டு நிதியுதவி | - | - | - |
| **மொத்தம்** | **120,112,789.90** | **133,341,461.67** | **13,228,671.77** |

**குறிப்பு** : மாணவர் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்ட காரணத்தினால் மீளெழும் செலவுத்தொகைகள் தொடர்ச்சியாக அதிகரித்துள்ளது.

| 17. நிதி விருத்தி பற்றிய விபரங்கள் (ஏற்படுத்தப்பட்ட வருமானம்) 31.12.2012 இல் உள்ளபடி | | | |
|---|---|---|---|
| வருமானத்திற்கான மூலம் | 2013 க்கான வழங்கல் Rs. | 2013 இல் வசூலித்தல் | பற்றாக்குறை / உபரி Rs. |
| a. பட்டப்பயில் கற்கை நெறிகள் | 253,000.00 | 813,720.00 | 560,720.00 |
| b. பட்டப்பின் படிப்பு | - | - | - |
| c. ஆலோசனை வழங்கல் | - | - | - |
| d. ஏனையவை | - | - | - |
| **மொத்தம்** | **253,000.00** | **813,720.00** | **560,720.00** |

**குறிப்பு** : கற்கை நெறிகளுக்கு கட்டண வரி இல்லாத காரணத்தினால் வருமானம் உருவாக்கப்படவில்லை. பட்டப்பயில் கற்கை நெறி மாணவர்களின் பதிவுக்கட்டணம் மூலமே வருமானம் உருவாக்கப்படுகின்றது.

| 18. நிதி பெறுபேறு ஆய்வு 31.12.2013 இல் உள்ளபடி | | |
|---|---|---|
| விடயம் | **சூத்திரம்** | செலவீனங்கள் / ஒரு மாணவருக்கு **Rs.** |
| a. மீண்டெழும் செலவீனங்கள் / ஒரு மாணவருக்கு (RE) | RE/ மாணவர் எண்ணிக்கை | 67,153.94 |
| b. மூலதன செலவீனங்கள் / ஒரு மாணவருக்கு (CE) | CE/ மாணவர் எண்ணிக்கை | 362,406.23 |
| **மொத்தம்** | | **429,560.17** |

**குறிப்பு** : கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் இவ்வருடத்தில் மாணவர்களுக்கான செலவுத்தொகை உள்வாங்கல் மாணவர்கள் எண்ணிக்கை அதிகரித்ததற்கிணங்க குறைவடைந்துள்ளது.

CHECKED / RETURNED
Signature: P. Sivagnanam
Name: P. Sivagnanam

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
Auditor General's Department

ஈஎன்/பீரீ/பீ/எஸ்வீஜஏஎஸ்/1/13/02 2014 ஒக்தோபர் 15

பணிப்பாளர்,
சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகம்
கிழக்கு பல்கலைக்கழகம், இலங்கை

**சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 108 (2) ஆம் பிரிவின் பிரகாரமான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை.**

---

சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 107(5) ஆம் உபபிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108 (1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதிய என்னுடைய கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன. பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 108(2) உப பிரிவின் பிரகாரம் விரிவான அறிக்கையொன்றாகவும் இவ்வறிக்கை கருதப்பட வேண்டும்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான முகாமைத்துவத்தின் பொறுப்புகள்

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

1

37

CHECKED
P. Sivagnanam

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.



38

CHECKED

1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை அரச துறை கணக்கீட்டுத் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சேவையிலிருந்து இடைநிறுத்தப்பட்ட அல்லது நீக்கப்பட்ட 04 உத்தியொகத்தர்களிடமிருந்து அறவிடவேண்டிய ரூபா 573,338 கூட்டுமொத்தத் தொகையான கடன் மீதிகள் 02 ஆண்டுகளிற்கு மேலாக நிலுவையாக இருந்தது. எவ்வாறாயினும், நிறுவகம் அந்த நிலுவையாகவிருக்கின்ற மீதிகளை அறிவிடுவதற்கு நடவடிக்கை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ரூபா 14,393 கூட்டுமொத்தத் தொகையான சம்பளக் கடன்கள் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களிடமிருந்து அவற்றினை அறவிடாமல் 02 ஆண்டுகளிற்கு மேலாக நிலுவையாக இருந்தது.

(இ) கிழக்கு பல்கலைக்கழகத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா 12,046 தொகை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்காமல் 02 ஆண்டுகளிற்கு மேலாக நிலுவையாக இருந்தது.



CHECKED
P. Sivan
39

### 2.2.2 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

ஒவ்வொரு விடயங்களிற்கும் எதிரே குறிப்பிடப்பட்ட பின்வரும் சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| விடயம் | பெறுமதி | கிடைக்கப்பெறாத சான்றுகள் |
|---|---|---|
| | ரூபா | |
| (அ) காணி மற்றும் கட்டிடங்கள் | 39,078,017 | உரித்துறுதிகள் |
| (ஆ) பொறி மற்றும் இயந்திரங்கள் | 2,294,781 | நிலையான சொத்துப் பதிவேடுகள |
| (இ) மோட்டார் வாகனங்கள் | 237,372 | நிலையான சொத்துப் பதிவேடுகள |
| (ஈ) தளபாடம் பொருத்திகள் மற்றும் அலுவலக உபகரணங்கள் | 23,107,830 | நிலையான சொத்துப் பதிவேடுகள |
| (உ) ஏனைய சொத்துக்கள் | 777,275 | நிலையான சொத்துப் பதிவேடுகள |
| (ஊ) புத்தகங்கள் மற்றும் சஞ்சிகைகள் | 242,287 | நிலையான சொத்துப் பதிவேடுகள |
| (எ) நலன்புரிப் பொருட்கள் | 1,585,071 | நிலையான சொத்துப் பதிவேடுகள |
| (ஏ) சுகாதார உபகரணங்கள் | 105,432 | நிலையான சொத்துப் பதிவேடுகள |
| (ஐ) ஆய்வுகூட மற்றும் கற்பித்தல் உபகரணங்கள் | 23,300 | நிலையான சொத்துப் பதிவேடுகள |
| (ஒ) விளையாட்டுப் பொருட்கள் | 978,977 | நிலையான சொத்துப் பதிவேடுகள |
| (ஓ) கடன்கள் மற்றும் முற்பணங்கள் | 7,067,789 | விரிவான பட்டோலைகள் மற்றும் காலப்பகுப்பாய்வு |



CHECKED

40

**2.2.3 போதிய அதிகாரத்தால் ஆதாரப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்**

பொது முயற்சிகள் பணிப்பாளர் நாயகத்தின் 1998 மார்ச் 06 ஆந் திகதிய பிஈ/01/174/11(ஆ) ஆம் இலக்க கடிதம் மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 2013 மே 23 ஆந் திகதிய 08/2013 ஆம் இலக்க தாபனங்கள் சுற்றறிக்கை கடிதம் என்பவற்றின் பிரகாரம், அரசாங்க உத்தியோத்தர்களிற்காக மொழித்தேர்ச்சிக்காக செலுத்த வேண்டிய படிகள் அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச் சட்டச் சபைக்கு விரிவாக்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், 2012 ஆம் ஆண்டிலிருந்து 2013 மே 31 வரை மொழித் தேர்ச்சிப்படியாக மூன்று கல்விசாரா உத்தியோகத்தர்களிற்கு ரூபா 27,650 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் இக்கொடுப்பனவு 2014 ஏப்ரல் 30 வரையும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை. இது தொடர்பில், பணிப்பாளர் 2013 மே மாதமளவில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிடமிருந்து சுற்றறிக்கை பெற்ற பின்னர் படிக் கொடுப்பனவுகள் 2013 யூனிலிருந்து நிறுத்தப்பட்டிருந்தது என அறிவித்திருந்தார்.

**2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட இணங்காமை சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களிற்கான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 109 ஆம் பிரிவு | 2012 ஆம் ஆண்டிற்காக கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்கள் மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 ஏப்ரல் 30 வரை அரசாங்க வர்த்தமானியில் வெளியிடப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) நிதிப்பிரமாணங்கள்<br>நி.பி. 756 | மீளாய்வாண்டு இறுதியிலுள்ளவாறான களஞ்சியங்களின் வருடாந்த பௌதீக மெய்மையாய்வு 2014 மே 22 வரையும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

5

41

CHECKED

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி நிறுவனங்களிற்கான தாபன விதிக்கோவை

| | |
|---|---|
| (i) அத்தியாயம் X இன் பிரிவு 20.6 | 02 கல்விசார் உத்தியோகத்தர்களால் எடுக்கப்பட்ட சம்பளமற்ற விடுமுறைகளின் விபரங்கள் மாதாந்தம் படிவம் பொது 96 இல் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அறிக்கையிடப் பட்டிருக்கவில்லை. |
| (ii) அத்தியாயம் XXVII இன் பிரிவு 3:1 | பல்கலைக்கழகத்தின் கல்விசார் உத்தியோகத்தர்களின் வருகை மற்றும் வெளிச் செல்லல் என்பன வருகைப் பதிவேட்டில் பதியப்பட்டிருக்கவில்லை. இது தொடர்பில் பணிப்பாளர் வழமையாக கல்விசார் உத்தியோகத்தர்கள் அவர்களுடைய வருகையை பதிவேட்டில் அவர்களுடைய வருகையை மாத்திரமே பதிந்திருந்தரென என எனக்குத் தெரிவித்தார். |

3. **நிதிசார் மீளாய்வு**

3.1 **நிதிசார் விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி, மீளாய்வாண்டில் நிறுவகத்தின் தொழிற்பாடுகள் விளைவித்திருந்த மீண்டுவரும் செலவுகளிற்கான ரூபா 68,364,000 ஆன அரசாங்க மானியத்தைக் கணக்கிற்கு எடுக்க முன்னர் உள்ள ரூபா 70,750,664 ஆன பற்றாக்குறையை முன்னைய ஆண்டிற்கான ரூபா 57,500,000 அரசாங்க மானியத்தை கணக்கிற்கு எடுக்க முன்னரான ரூபா 53,926,128 ஆன நேரொத்த பற்றாக்குறையுடன் ஒப்பிடலாம் ஆகையால் நிதிசார் விளைவுகளில் ரூபா 16,8254,536 ஆல் மேலும் ஒரு வீழ்ச்சியைக் காட்டுகின்றது. ஆளணி வேதனங்கள், பரீட்சை செலவினங்கள் மற்றும் நலன்புரிச் செலவினங்கள் என்பன அதிகரித்தமை இந்த வீழ்ச்சிக்கு பிரதான காரணமாக இருந்தது.



42

CHECKED
P. Sivagnam

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1. செயலாற்றல்

மீளாய்வாண்டின் போது பல்கலைக்கழகத்தின் கல்விசார் செயலாற்றல் பின்வருமாறு இருந்தன.

(அ) பரீட்சைகளின் பெறுபேறுகள்

2013 இல் நடைபெற்ற இறுதிப் பரீட்சைகள் மற்றும் சித்தியடைந்த பட்டதாரி மாணவர்களின் பின்வருமாறு உள்ளன.

| விபரங்கள் | இசைப் பீடம் | நடன பீடம் | நாடகம் மற்றும் அரங்க பீடம் | கண்காட்சி மற்றும் தொழில் நுட்பக் கலைகள் பீடம் |
|---|---|---|---|---|
| மீளாய்வாண்டின் போது இறுதிப் பரீட்சைகளிற்காக தோற்றிய மாணவர்களின் எண்ணிக்கை | 26 | 25 | 50 | 43 |
| பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களின் எண்ணிக்கை | 19 | 22 | 46 | 33 |
| பரீட்சைக்காக தோற்றிய மாணவர் எண்ணிக்கையின சதவீதமாக பட்டப் பரீட்சையில் சித்தியெய்திய மாணவர்களின் எண்ணிக்கை | 73.07 | 88 | 92 | 76.74 |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(i) இறுதிப் பரீட்சைக்கு தோற்றி இசைப் பீடத்தின் 26 மாணவர்களில் இறுதிப் பரீட்சைக்கு தோற்றிய மொத்த மாணவர்களின் எண்ணிக்கையின் 73.07 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் 19 மாணவர்கள் பரீட்சையில் சித்தியடைந்திருந்தனர்.

7

CHECKED
P. Sivag...

43

(ii) இறுதிப் பரீட்சைக்கு தோற்றி கண்காட்சி மற்றும் தொழில் நுட்பக் கலைகள் பீடத்தின் 43 மாணவர்களில் இறுதிப் பரீட்சைக்கு தோற்றிய மொத்த மாணவர்களின் எண்ணிக்கையின் 76.74 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் 33 மாணவர்கள் பரீட்சையில் சித்தியடைந்திருந்தனர்.

**(ஆ) ஒரு மாணவருக்கான கிரயம்**

பல்கலைக்கழகத்தின் ஒவ்வொரு பீடத்தின் மொத்தக் கிரயம் மற்றும் மீளாய்வாண்டிற்கான மாணவர் கிரயம் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | இசைப் பீடம் | நடன பீடம் | நாடகம் மற்றும் அரங்க பீடம் | கண்காட்சி மற்றும் தொழில் நுட்பக் கலைகள் பீடம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| மொத்தக் கிரயம் (ரூபா) | 12,496,872 | 9,350,020 | 21,280,967 | 28,894,594 | 72,022,454 |
| மொத்த மாணவர் எண்ணிக்கை | 305 | 197 | 249 | 246 | 997 |
| ஒரு மாணவருக்கான கிரயம் (ரூபா) | 40,973 | 47,462 | 85,466 | 117,458 | 67,154 |

கண்காட்சி மற்றும் தொழில் நுட்பக் கலைகள் பீடத்தில் ரூபா 117,458 தொகையான ஒரு மாணவனுக்கான உயர்ந்த கிரயம் பதிவுசெய்திருந்த அதேநேரம் இசைப் பீடத்தில் ரூபா 40,973 தொகையான ஒரு மாணவனுக்கான குறைவான கிரயத்தை பதிவுசெய்திருந்தது.

**(இ) மகாபொல மற்றும் உதவிப்பணம்**

மீளாய்வாண்டின் போது 572 மாணவர்களிற்கு உதவிப் பணங்களாக ரூபா 5,552,500 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் 108 மாணவர்களிற்கு மாஹாபொலவாக ரூபா 660,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அந்த மாணவர்கள் அவர்களுடைய பாடநெறிகளை இடைநிறுத்தியதாக 2014 மே 22 ஆன கணக்காய்வு திகதிவரை 610

8

44

CHECKED

மாணவர்களுக்கு மாஹாபொல சம்பந்தமாக ரூபா 1,826,900 தொகை செலுத்தப்பட்டிருக்கவில்லை.

### 4.2 முகாமைத்துவ திறமையீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிறுவகம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர்கல்வி நிறுவனங்களிற்கான தாபன விதிக்கோவையின் XXII ஆம் அத்தியாயத்தின் 5.2 மற்றும் 5.3 ஆம் பிரிவுகளின் பிரகாரம் ரூபா 5 மில்லியன் மோசடியான காசோலை மற்றும் ரூபா 4.5 மில்லியன் மோசடியான கொடுப்பனவு என்பற்றுக்காக குற்றஞ்சாட்டப்பட்ட சிரேஷ்ட உதவி காசாளர் மற்றும் களஞ்சிய காப்பாளர் என்போருக்கு எதிராக முறையான விசாரணை தொடங்குவதற்கு ஏறத்தாழ ஒரு ஆண்டுகாலம் தாமதப்பட்டிருந்தது.

(ஆ) 2011 இல் செய்யப்பட்ட நிலவரிப்பு, திரைச்சீலைகள், சிற்பவேலை உருளைகள் மற்றும் அடுக்கு கட்டில்கள் என்பனவற்றின் கொள்வனவுகள் தொடர்பில் ரூபா 1,395,000 தொகை மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், நிறுவகம் மேற்குறிப்பிட்ட மேலதிக கொடுப்பனவிற்காக பொறுப்புடைய நபர்களிற்கு எதிராக தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) நிறுவகம் மட்டக்களப்பிலுள்ள தனியார் வங்கியில் பேணப்பட்ட தெரியாத நபரொருவரின் வங்கி கணக்கொன்றின் ஊடாக நிறுவகத்தின் உத்தியோகத்தரால் ரூபா 3,622,315 பெறுமதிக்கு பதின்நான்கு காசோலை காசாக்குமிடத்து காசோலை மோசடியானதென கண்டுபிடித்த காரணத்தால் அடைந்த நட்டத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) நிறுவகம் உள்ளபடியான தேவைகளை கருத்திற்கொள்ளாமல் ரூபா 1.27 மில்லியன் கிரயத்தில் நிழற்படப்பிரதி இயந்திரத்திற்காக 106 ரோனர்கள் கொள்வனவு செய்திருந்ததுடன் ரோனர்களின் குறைந்த தரமான நிழற்பட பிரதி இயந்திரங்களின் ரம், ரம் பிளேட், கீட்டர் ரோலர் போன்ற உபபாங்களை பாதித்திருந்தது. இதன்விளைவாக, அத்தகைய 21 ரோனர்கள் 2014 மே 22 ஆன கணக்காய்வு திகதிவரை நிறுவகத்தின் களஞ்சியத்தில் பயன்பாடின்றி இருந்தது.



CHECKED
P. Sivagnanam
45

### 4.3 மனிதவள முகாமைத்துவம்

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிறுவகத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி மற்றும் உள்ளபடியான பதவியணியின் நிலைமை கீழே தரப்பட்டுள்ளது.

| பதவியணி வகை | அங்கீகரித்த ஆளணி | உள்ளபடியான ஆளணி | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகை |
|---|---|---|---|---|
| கல்விசார் | 38 | 35 | 03 | - |
| கல்விசார் துணைநிலை | 07 | 01 | 06 | - |
| நிர்வாகம் | 01 | 01 | -- | |
| நிர்வாகம் துணைநிலை | 04 | 02 | 02 | - |
| தற்காலிக (கல்விசார்) | 06 | 01 | 05 | - |
| வருகையாளர் | - | - | - | 15 |
| மொத்தம் | 56 | 40 | 16 | 15 |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

நிறுவகமானது 16 வெற்றிடங்களை நிரப்புவதற்கு கீளாய்வாண்டு இறுதிவரைகூட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. கணக்களிதகைமை மற்றும் நல்லாளுகை

### 5.1 செயல்நடவடிக்கைத் திட்டம்

அரச நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் 2010 மார்ச் 10 ஆந் திகதிய பிஎவ்/ஆர்//2/2/3/5/(4) சுற்றறிக்கை கடிதத்தின் பிரகாரம் நிறுவகம் மீளாய்வாண்டிற்கான வருடாந்த செயல்நடவடிக்கை திட்டம் மற்றும் வருடாந்த செயலாற்றல் அறிக்கை என்பன தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.2 கொள்வனவுத் திட்டம்

2006 கொள்வனவு வழிகாட்டல்களின் 4.2 ஆம் பிரிவின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான கொள்வனவுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.



CHECKED

46

## 5.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதிடப்பட்டவற்றிற்கும் உண்மையான வருமானம் மற்றும் செலவினத்திற்கும் இடையில் பாரிய முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடானது முகாமைத்துவக் கட்டுப்பாட்டின் ஒரு தாக்கமான கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பதைக் காட்டுகின்றது.

## 6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளில் குறைபாடுகள் காலத்திற்கு காலம் நிறுவகத்தின் பணிப்பாளரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(ஆ) கொள்வனவு

ஒப்பம்: எச்.ஏ.எஸ். சமரவீர
கணக்காய்வாளர் தலைமை அதிபதி
*M*

CHECKED



47